அன்பும் அருளும் எங்கும் நிலைக்கட்டும்

அருட்பெரும் ஜோதி அருட்பெரும் ஜோதி
தனிப்பெரும் கருணை அருட்பெரும் ஜோதி

## சித்தர்கள் வழங்கிய தீட்சை என்னும் உபதேசம்

## மரணமில்லாப் பெருவாழ்வு என்கின்ற சாகாக்கலையாகிய தீட்சை

வாக்கினில் வந்து வல்லமை வழங்கிடுவாய்
தாக்குதல் தடுத்து தாயாய் தயை புரிவாய்
ஏக்கம் எரித்து ஏற்றம் வழங்கிடுவாய்
காக்கும் என் கடவுளே ஸ்ரீ காகபுஜண்டரே

உலகமெங்கும் இறைவனுடைய திருவருட்கருணையினால் எத்தனையோ உயிரினங்கள் படைக்கப்பட்டுள்ளன.அப்படி தோன்றிய உயிரினங்கள் பிறந்து, வளர்ந்து,இறந்து பிறவி மரணம் என்கின்ற பிறவிச் சுழற்ச்சியிலே மாண்டு பிறந்து மாண்டு பிறந்து உழன்று முடிவில்லாத சூழலிலே தொடர்ந்து துன்புற்று கொண்டே வருகின்றன.எல்லாம் வல்ல அருட்பெரும் ஜோதி ஆண்டவராகிய சிவபெருமானின் திருவருட்கருணையினாலே மனிதன் என்கின்ற உயிரினமும் படைக்கப்பட்டான். உலகிலே எத்தனையோ உயிரினங்கள் இருந்தாலும் அவை எல்லாம் இறைவனை உணர்ந்து நெகிழ்ந்து இறவனை கண்டு இறைவனை உணர்ந்து இறைவனை அறிந்து இறை மயமாகி மரணமில்லாது வாழ்ந்து பிறப்பு இறப்பு என்கின்ற சக்கரச் சுழற்சியிலே மாட்டாமல் என்றென்றும் சிரஞ்சீவியாய் வாழ்வதற்கு மனிதப் பிறவியினால் மட்டும்தான் முடியும்.காரணம் மற்ற உயிரினங்களெல்லாம் இறைவனை ஒருவாறு பார்க்க முடிந்தாலும் இறை நிலையையோ அறிவு உன்னத நிலையையோ அடைய முடியாது. மனிதன் என்கின்ற ஒருவன் மாத்திரமே பார்த்து அந்த அருளை அடைந்து மரணமில்லாத பெருவாழ்வை அடையமுடியும்.உதாரணமாக சாலையிலே ஒரு கார் உந்து வண்டி செல்கின்றது.அதை எல்லோருமே பார்ர்க்கலாம். ஓடுகின்ற காரையோ,ரயிலையோ,விமானத்தையோ யார் வேண்டுமானாலும் பார்க்கலாம்.ஆனால் அதை சொந்தமாக்கிக் கொண்ட ஒருவன் மாத்திரமே அதில் வேண்டிய நேரத்தில் பயணம் செய்வதற்கோ ஏறுவதற்கோ இறங்குவதற்கோ எல்லாவற்றையும் செய்ய முடியும்.அதுபோல எல்லா உயிரினங்களும் இறைவனை பார்த்தாலும் எப்படி காருக்குச் சொந்தமான ஒருவன் அதை அனுபவிப்பது போல மனித தேகத்தை சொந்தமாக்கிக்கொண்ட ஒருவன்தான் இறை நிலையை அடையமுடியும்.அதனால்தான் அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்று சொல்லியிருக்கின்றாரகள்.ஏன் சொன்னார்கள்? மனிதனும்தான் உண்ணுகின்றான், உறங்குகின்றான் அதேபோல் எல்லா விலங்கினங்களும் உண்ணுகின்றன உறங்குகின்றன, இனப்பெருக்கத்தை செய்கின்றன. இவன் பெரிதாக என்ன சாதித்துவிட்டான்?அல்லது பெரிதாக அவன் என்ன அடைந்துவிட்டான்? இந்த மனித தேகம் அரிது என்பதற்கு சிந்தித்துப் பார்க்கவேண்டாமா. இந்த மனிதன் என்கின்ற சொல் எதிலிருந்து வந்தது? சிந்தித்துப் பார்த்திருக்கிறோமா?ஆராய்ந்து அறிந்திருக்கிறோமா?மனுசன் என்ற வார்த்தையிலிருந்துதான் மனிதன் என்பவன் வந்தான்.மனுசன் என்பதற்கு என்ன பொருள் என்றால் ஜீவகதியாக அதாவது எல்லா உரினங்களுக்கும் குறிப்பாக மனிதனுக்கு நாசித் துவாரம் என்று சொல்லக்கூடிய மூக்கு துவாரங்களின் வழியாக வெளியே சுவாசம் சதாகாலமும் போய் போய் அழிந்து விடுகின்றான்.இப்படி வெளி நோக்கி சுவாசம் செல்வதற்கு **ஜீவகதி** என்று பெயர்.இப்படி போகின்ற சுவாசத்தை ஒரு சித்தனாகிய குருமுகாந்திரமாக அறிந்து கொண்டு உள் நோக்கிச் செல்லுகின்ற சுவாச கதியை அறிந்து

கொண்டால் அதுதான் **சிவகதி** என்று பெயர்.அந்த கதியை அறிந்து கொண்டால் இவன் மரணமில்லாப் பெருவாழ்வை அடைவதற்கு ஏதுவான வழியை அறிந்து கொள்ளுகின்றான்.அப்படி வெளிநோக்கி சுவாசங்கள் போகிறபொழுது அவன் மனுனீசனாக வாழ்கின்றான்.அப்படி போகின்ற சுவாசத்தை எல்லாம் குருமுகாந்திரத்தால் சித்தனால் அறிந்து கொண்டு உள்நோக்கி செல்லக்கூடிய சுவாசமாக அறிந்துகொண்டால் அவன் மனுஈசனாகின்றான்.சாதாரணமாக நாம் நடைமுறையிலே பழமொழி சொல்லுகின்றபொழுது சித்தன் போக்கு சிவன் போக்கு என்று சொல்லுவார்கள்.இதற்கு என்ன பொருள் சாதாரணமாக எடுத்துக்கொள்வார்கள் என்றால் அவர்கள் மனம் போன போக்கிற்கு சாலையில் திரிவார்கள் காடு மேடு உழல்வார்கள் எப்படி வேண்டுமானாலும் போவார்கள் இதுதான்சித்தன் போக்கு சிவன் போக்கு என்று அறியாமையிலே சொல்லுவார்கள்.இந்த மரணமில்லாப் பெருவாழ்வு என்ற 65 வது சித்தியை கைவல்யப்படுத்திக் கொண்ட சித்தர்களின் கூட்டத்துத் தலைவனே சிவபெருமான்.சாகாக் கல்வியை அளிப்பதற்கு அந்த தகுதி உள்ளவர் யார் என்று கேட்டால் சிவபெருமான்.அகமாக உள்நோக்கி சுவாசம் செல்லுகின்றபோது அதற்கு சிவகதி என்று பெயர்.அப்படி உள்நோக்கி சிவகதியை அறிந்து கொண்டவனே சித்தனாவான்.அப்படி உள்நோக்கி சுவாசம் போகின்றபொழுது அந்தக் கலையை அறிந்தபொழுது அவன் மனுஈசனாகி இரு புருவங்களுக்கு இடைப்பட்ட 72,000 நாடிகளும் ஒன்றாகச் சேரக்கூடிய இந்த உடலுக்குத் தேவையான உயிர்ப்பு சக்தியை அதீதமான மிக மிக நுண்ணிய உஷ்ணத்தை தரக்கூடிய அந்த திருச்சிற்றம்பலம் என்றும் கயிலாயம் என்றும் வைஷ்ணவம் என்றும் சொல்லும்படியான அந்த இடத்தில் இருந்துகொண்டு இந்த உயிரானது இயங்கிக்கொண்டு இருக்கிறதை எவன் ஒருவன் அறிந்து கொண்டானோ அவனே மனுஈசனாகின்றான்.அப்படி மரணமில்லாத பெருவாழ்வினை அறியாமல் உண்மையான மெய் அன்பு நெறியை அறிந்து கொண்டு ஆன்ம நேயத்தையும் மனித நேயத்தையும் தன்னுடைய உள்ளத்திலும் ஒவ்வொரு இரத்த அணுக்களிலும் கொண்டவனே மனுசன். மனுஈசன். அது அல்லாது சுயநலத்தினாலும் ஆசை வெறியினாலும் தன்னை அறிகின்ற அறிவை அறியாது கால் போன போக்கிலே செல்வதை போல் செல்லுகின்றானே இறந்துவிடுகின்றானே அவனுக்கே மனுனீசன் என்று பெயர்.ஆகவே உண்மையாக நாம் மனுசனாகிய மனுஈசனாக வாழ்வதற்கான வழியை அறிய வேண்டாமா.காலாகாலமாக இந்த மனிதன் துன்பத்திலே வாழ்ந்து வாழ்ந்து இறந்து அல்லல்படுவதை கண்டு பொறுக்காத எல்லாம்வல்ல சிவபெருமான்
மனிதனை உய்விப்பதற்காக சித்தர்களை ஞானிகளை இந்த உலகத்திற்கு வாரி வாரி வழங்கிக்கொண்டே இருக்கின்றார்.பிறவி என்கின்ற ஒரு தலையை மரணம் என்கின்ற ஒரு முடிவை இந்த இரண்டையும் கடந்து நெறி அடைந்து சுத்த பிரணவ ஞான தேகம் என்று சொல்லும்படியான மூன்றுவித சித்திகளையும் அடைந்த சித்தர்கள் கூட பிறப்பை இறப்பை வென்றுவிட்ட சித்தர்களும் கூட மனிதன் நலம்வாழவேண்டும் என்பதற்காக மீண்டும் மீண்டும் இந்த உலகத்திலே வந்து அவதரித்து பிறந்து தோன்றி மனிதனை நல்வழி காட்டுவதற்காக வந்திருக்கின்றார்கள். அப்படியே யானும் இது 18 வது பிறவியாக வந்திருக்கின்றேன்.உலகிலே தியானம் என்கின்ற ஒரு நெறியை யோக நெறியை தவ நிலையை காட்டுவதற்கு எத்தனையோ மார்க்கங்கள் இருக்கின்றன.எத்தனையோ மார்க்கங்கள் இருந்தபொழுதும் எது உண்மையான மார்க்கம் என்பதை எவன் ஒருவன் அறிந்து கொண்டானோ அவனே புண்ணியவான் அவனே சிரஞ்சீவியாகிய வாழ்க்கையை அடையமுடியும்.சித்தர்கள் மாத்திரமே உலகிலே மெய் நெறியை காட்டியிருக்கின்றார்கள்.ஞானிகளும், ரிஷிகளும், முனிவர்களும்
மற்றும் சாதுக்களும் எத்தனையோ பேர் எத்தனையோ வழிமுறைகளை காட்டியபொழுதும் அவர்கள் எல்லாம் என்ன கூறுவார்கள் தெரியுமா? நானே கடவுள் என்னை மட்டுமே நீ வணங்கு அல்லது நான் காட்டக்கூடிய தெய்வத்தையே நீ வணங்கியோ உபாசித்தோ சென்றால்தான் நீ முடிவான நிலையை அடைய முடியும். இறை நிலையை அடைய முடியும்.ஆகவே இதுதான் சிறந்தது அதுதான் சிறந்தது என்று வழிகாட்டி உன்னையும் ஏமாற்றி அவனையும் தன்னைத்தானே ஏமாற்றி அவனும் இறந்து விடுவான். உன்னையும் இறக்கச் செய்வான்.உனக்கு புண்ணியவசமும்

இறை அருளை அடையவேண்டிய நிலையும் இருந்தால் மாத்திரமே இதை அடைய முடியும்.ஆனால் மனிதனாக பிறந்த ஒவ்வொருவனும் இந்த மரணமில்லாத பெருவாழ்வை சாகாக்கல்வியை அடைந்து அன்பு உருவாக அருள் வடிவாக ஆனந்த நிலையாக வாழவேண்டும் என்பதே சித்தர்கள் குறிப்பாக காகபுஜண்டரின் பேராவல்.யார் யார் எத்தனை வழிகளை காட்டியபொழுதும் உண்மை வழி எது என்பதை நீ அறிந்து ஆராய்ந்து அதன் பின் செல் என்று கூறக்கூடியவர்கள்தான் சித்தர்கள். யார் யார் எதை எதைச் சொன்னாலும் அறிவினாலே அறிந்து கொள்.அப்படி அறி உனக்கு முழுமையாக வராத பொழுது பரிபூரணமான சரணாகதியை அடைகின்றபொழுது அந்த பரிபூரண மெய்ச்சரணாகதியே உனக்கு நல்நிலையைக் காட்டும்.

சித்தரகள் மாத்திரமே யார் கூறியபொழுதும் சுருதி,யுக்தி,அனுபவம் என்ற மூன்றுக்கும் எப்பொழுது ஒத்து வருகின்றதோ அப்பொழுது மாத்திரமே அதை ஏற்றுக்கொள் என்று சொல்லியிருக்கிறார்கள்.சுருதி என்பது நூல்களிலே வேதங்களிலே சித்தர்கள் சொல்லியிருக்கக்கூடிய வழிகளாகும்.யுக்தி என்பது இந்த வழியிலே செல் என்று ஒரு குருவோ, சித்தனோ மகானோ காட்டக்கூடிய வழி.அனுபவம் என்பது இந்த இரண்டும் அதாவது உனக்கு குருவாக இருக்கக்கூடியவர்

சொல்லக்கூடியது சுருதியிலே சரியாக இருக்கின்றதா அதற்கு உவமைகளும் உதாரணங்களும் இருக்கிறதா என்பதை பார்த்து அப்படி இருந்தபொழுதும் இவர் சொன்ன யுக்தியும் நாம் செல்லுகின்ற வழிக்கு சரிப்பட்டு வருகின்றதா உண்மையான அன்பு நமக்கு ஏற்படுகின்றதா உண்மையான் மெய் இறை உணர்வு நமக்கு வருகின்றதா சிரஞ்சீவி என்ற நிலைக்கு நாம் செல்ல முடியுமா என்பதை அறிவினால் அறிந்து ஆராய்ந்து நீ ஏற்றுக்கொள் என்று சொல்லியிருக்கின்றார்கள்.ஆகவே மனிதனாகப் பிறந்தவன் மரணமில்லாமல் வாழவேண்டும் என்பதே சித்தர்களின் அவா.அப்படி ஒன்று வாழ முடியுமா என்ற கேள்வியும் எத்தனையோபேருக்கு எழத்தான் செய்யும்.சாதாரணமாக நோய் இல்லாமலே வாழமுடியவில்லையே.துன்பம் இல்லாமலே வாழமுடியவில்லையே.மரணம் இல்லாமல் இருக்கமுடியுமா என்று கேட்பதற்கு எத்தனையோ சித்தர்களும் சொல்லியிருக்கிறார்கள் வேடிக்கையாக கிராமியப்பாடல்களாகவும் பாடியிருக்கிறார்கள்.கொங்கணர் சொல்லுகிறார் இதை ஒரு கிராமியப்பாடலைப் போல்

ஊத்தைச் சடலம் என்று எண்ணாதே
இதை உப்பிட்ட பாண்டமென்றேண்ணாதே
ஊத்தைச் சடலம் என்று எண்ணாதே
இதை உப்பிட்ட பாண்டமென்றேண்ணாதே
பார்த்தபேருக்கு ஊத்தைஇல்லை
அதை பக்குவம் பாரடி வாலைப்பெண்ணே

எவ்வளவு பெரிய கருத்தை எவ்வளவு எளிமையாகச் சொல்லியிருக்கின்றார்கள்.இறைவனுடைய திருவருளை அடைவதற்கு உலகிலே எத்தனையோ வழியிலே எத்தனையோ பேர் முயன்று இருக்கின்றார்கள்.இந்த உலக பிரபஞ்சத்தில் எல்லாம் துறவு நெறி என்றவுடனே முதலிலே எல்லோருக்கும் நினைவிற்கு வரக்கூடிய மாபெரும் சித்தர்தான் பட்டினத்து அடிகளார்.காரணம் ஒரு மனிதன் துறவு மேற்கொள்ளுகின்ற பொழுது வறுமையினால் அல்லல்பட்டு இனி வாழ்வதற்கு வழிஇல்லை என்கிறபொழுது துறவை மேற்கொள்கிறார் சிலர்.வீட்டிலே மனைவியினாலோ மற்றவராலோ துன்பம் ஏற்படுகின்றபொழுது அதை பொறுக்கமுடியாமல் சீ எப்படியாவது போய் விடலாம் என்று துறவை மேற்கொள்வோர் எத்தனையோ பேர்.கடன் தொல்லை தாங்காமல் துறவியாவோர் எத்தனையோ பேர்.தான் நினைத்த காதலியோ அல்லது தான் நினைத்த தொழிலோ அல்லது தான் நினைத்தது ஏதோ ஒன்று நடக்காத பொழுது உலகின் மீது வெறுப்பு கொண்டு துறவு கொண்டோர் எத்தனையோ பேர்.ஆனால் இவர்கள் எல்லாம் தான் நினைத்தது கிடைத்தவுடனே அந்த நெறியை விட்டு மாறிவிடுவார்கள்.ஆனால் எல்லா செல்வங்களும்

நிறைவாகப் பெற்று அந்த காலத்திலே மன்னனுக்கே கடன் கொடுக்கக்கூடிய அளவுக்கு மிகப் பெரிய செல்வமும் நினைத்த உடனே இறைவனை பாடக்கூடிய திருவருள் வல்லபமும் சகல கல்வி நலமும் பரிபூரண ஆரோக்கியமும் அழகும் அறிவும் அன்பும் மிகுந்த மனைவியும் இறைவியை ஒத்த தாய்ப்பாசமும் மிக்க தாயைப் பெற்றிருந்த போதெல்லாம் **காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே** என்று ஒரு மொழியை கேட்ட மாத்திரத்திலே துறவு கொண்ட பெருமான் எம்பெருமான் பட்டினத்து அடிகளார்.அவரை விட இன்னொருத் துறவியை சிறப்பாகக் கூறமுடியுமா?அப்படி துறவியெல்லாம் போற்றும்படியான துறவிக்குத் துறவியாம் சிவவடிவாய் இருந்த பட்டினத்து பிள்ளை என்ன சொன்னார்கள்?ஆகவே இந்த மார்க்கத்தை இறைநெறியை அடைவதற்காக எல்லா சுகங்களையும் விட்டு விட்டு துறவியானால் முடியுமா.இந்த நாட்டிலே வாழக்கூடிய வாழ்க்கையானது நரக வாழ்க்கையாக இருக்கின்றது. ஆகவே இந்த வாழ்க்கையே வேண்டாம் என்று காட்டிலே சுற்றினால் ஞானம் கிடைக்குமா?சரி அவையெல்லாம் விட்டு விட்டு ஊரைச் சுற்ற வேண்டாம்.உறவையெல்லாம் விட்டு விட்டு தன்னுடைய ஊன் என்கின்ற உணவையும் விட்டு விட்டு இன்னும் மேலே ஒரு படி சென்று தண்ணீரையும் கூட குடிக்காமல் சதாகாலமும் காற்றை அடக்கி காற்றை மட்டும் புசித்துக் கொண்டிருந்தாலும் கடவுளை அடைய முடியுமா? அல்லது இவற்றையெல்லாம் விட்டு விட்டு வம்பே வேண்டாம் என்று ஒரு கந்தை துணியை சுற்றிக்கொண்டு உலகினில் நாம் உழைத்துச் சப்பிடுகின்றபொழுது வினை வசப்படுவோம்.ஆகவே கிடைத்ததை உண்போம் என்று நாம் பிச்சையெடுத்து சாப்பிட்டாலும் ஞானம் கிடைக்குமா?இப்படி நெறிகளிலெல்லாம் ஞானம் கிடைக்காதப்பா.உண்மையான உள்ளன்பு வேண்டும்.அவனுக்குத்தான் ஞானம் கிடைக்கும்.அந்த உள்ளன்பை காட்டக்கூடியதே காகபுஜண்டரின் ஞானக்கல்வி சாகாக்கலை.எல்லாம்வல்ல பட்டினத்து அடிகளார் என்ன சொல்லுகின்றார்

காடே திரிந்து என்ன காற்றே புசித்து என்ன
கந்தைசுற்றி ஓடே எடுத்து என்ன
உள்ளன்பில்லாதவர் ஓங்குவிண்ணோர் நாடே
இடைமருது ஈசர்க்கு மெய் அன்பர் நாரியர்பால்
வீடே இருப்பினும் மெய்ஞான வீட்டின்பம் மேவுவரே.

இடைமருதீசர் என்பது இந்த மனமானது புறநாட்டம் கொண்டு நாசியின் வழியாக மூக்குத் துவாரங்களின் வழியாக செல்லக்கூடிய சுவாசமெல்லாம் வெளிநோக்கி ஓடுகின்றபொழுது இந்த மனதிற்கு மாடு என்று பெயர்.அப்படி இல்லாமல் உண்மையான நிலையறிந்து சாகநிலையறிந்து சாகாதகல்வியறிந்து புருவமத்தியாகிய திருச்சிற்றம்பலத்திலே சிதம்பரத்திலே நடனமிடுகின்ற எல்லம்வல்ல எம்பெருமானை நோக்கி அகமுகமாக சிந்தனையும் சுவாசத்தையும் திருப்பி அங்கே இருக்கக்கூடிய இடம் இருக்கிறதே அந்த திருப்பக்கூடிய நிலைக்கு நந்தி என்று பெயர்.அப்படி இருக்கக்கூடிய இடத்திற்கு சிதம்பரம் என்று பெயர்.அப்போ இடைமருதூர் என்பது எது? இறைவனுடைய திருவருட்கருணையினாலே அகநாட்டத்தினாலே புருவமத்தியாகிய திருச்சிற்றம்பலமாகிய திருஅண்ணாமலையாகிய வைஷ்ணவமாகிய அந்த 72,000 நாடி நரம்புகளும் சேரக்கூடிய இடத்திலே அன்பு உருவை அடைந்து இறைவனுடைய திருவருட்கருணையினாலே அறிவு நிலை என்ற மெய்யறிவு நிலையாகிய உண்மைநிலையை அறிந்துகொண்டு உலக உயிர்களின்பாலெல்லாம் அன்புகொண்டு அவர்கள் நலம்வாழ வேண்டுமே என்ற கருணையோடு வெளிநோக்கி திரும்புகின்றான்பார் அவன் சுவாசம் திரும்புகின்ற இடம் இருக்கிறதே அதுவே இடைமருதூர்.அந்த இடத்தில் இருக்கக்கூடிய மெய்யன்பர்கள் உலகிலே எத்தொழில் செய்தாலும் ஏதவஸ்தை பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே என்கின்றபொழுது அந்த நிலையிலே உலகிலே எந்த நிலையிலிருந்தாலும் இவையெல்லாம் அவர்களை ஒன்றும் செய்யாது.காகபுஜண்டரும் ஞானம் 80 லே "பரியேறிச் செவ்வாரியும் நடத்தலாகும் பஞ்சமாபாதகமும் பறந்தேபோகும்" என்றார்.அப்படி பரியேறிச் செவ்வாரி செய்யக்கூடிய மெய்யான வாசியைக்

காட்டக்கூடிய சாகாக்கல்வி தீட்சையைத் தரக்கூடியதே ஸ்ரீகாகபுஜண்டரின் ஞானதீட்சையாகும்.ஆகவே துறவு நெறியிலே சென்ற பட்டினத்து பெருமான் அலைந்து அலைந்து முடிவிலே குருபிரான் சிவபிரான் திருவருட்கருணையினாலே அகத்திலே இறைவனைக் காணக்கூடிய இந்த சாகாக்கல்வியை அறிந்து கொள்கிறார்.அதற்கு பிறகுதான் அழுது அழுது இறைவனை நோக்கிச் சொல்லுகின்றார்

வாசிதனைப் பார்த்து மகிழ்ந்து
உனைத்தான் போற்றாமல் காசிவரை போய்த்
திரிந்து காலலுத்தேன் பூரணமே

எல்லாம்வல்ல சிவபெருமானே மெய்யான குருவினுடைய பாதார விந்தங்களைப்பற்றி வாசியென்னும் படியான இந்த பேரின்ப பெருவாழ்வினை அறிந்துகொள்ளாமல் ஆலயம் ஆலயமாக சுற்றி நரை திரை பிணி மூப்பைப்பெற்று உடலெல்லாம் அயர்ந்து என் கால்களும் நிலை தடுமாறும்படியான நிலையை அடைந்து இப்படி எல்லாம் அலைந்தேனே!என்று கூறி,மேலும் என்ன கூறுகின்றார்?

உடலுக்குள் நீ நின்று உலவினதைக் காணாமல்
கடல் மலை தோறும் திரிந்து
காலலுத்தேன் பூரணமே!

எவ்வளவு தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்.இந்த பூரணமே என்பது நம்முடைய வலதுபுற நாசித் துவாரத்தின் வழியாகச் செல்லுகின்ற சுவாசத்திற்கு சூரியகலை என்றும் ரவி என்றும் பிங்கலை என்றும் பெயர் உண்டு.இடதுபுற நாசித் துவாரத்தின் வழியாகச் செல்லுகின்ற சுவாசத்திற்கு சந்திரகலை என்றும் இடகலை என்றும் மதி என்றும் இப்படி பல்வேறு பரிபாசையான பெயர்களைக் கூறியிருக்கின்றார்கள்.ஆகவே இப்படி உடலுக்குள்ளே இருக்கக்கூடிய இந்த அகநாட்டத்திலிருந்து தோன்றும்படியான சுவாசம் வலதுபுற நாசித்துவாரத்தின் வழியாகவும் இடதுபுற நாசித்துவாரத்தின் வழியாகவும் சென்று கொண்டிருக்கின்றது.இப்படி மாறி மாறி சுவாசம் போகிறது என்பதே உலகில் 90 சதவீத மக்களுக்கு தெரியாது.இப்படி வலதுபுற நாசித்துவாரத்தின் வழியாக இரண்டு மணி நேரமும் அதன்பிறகு இரண்டு மணி நேரம் இடதுபுறம் இப்படி மாறி மாறி சுவாசமானது ஓடிக்கொண்டிருக்கிறது.ஒரு மனிதனுக்கு வியாதியே இல்லாமல் வாழ்வதற்கும் சித்தர்கள் காட்டிக் கொடுத்திருக்கிறார்கள்.மருந்து வேண்டாம்.சுலபமான முறையைச் சொல்லியிருக்கிறார்கள்.வியாதி வருவதற்கு முன்பும் அறிந்து கொள்ள சொல்லியிருக்கிறார்கள்.இதெல்லாம் ஒரு அடிப்படை பாடம் படிப்பது போன்றது.எப்படி என்று கேட்டால் ஞாயிறு,சனி,செவ்வாய்க் கிழமைகளில் இந்த 3 நாட்களிலும் அதிகாலை 4 மணியிலிருந்து 6 மணிவரை சூரியக்கலை என்று சொல்லும்படியான வலது நாசித்துவாரத்தின் வழியாக சுவாசம் ஆரம்பித்து  இரண்டு மணி நேரம் அந்த வ்லதுபுற நாசி வழியாக சுவாசம் நடக்கும்.அடுத்தஇரண்டு மணி நேரம் அதாவது காலை6 மணியிலிருந்து 8 மணி வரை சுவாசம் இடதுபுறம் நடக்கும்.இப்படி மாறி மாறி நடக்கும்.திங்கள்,புதன்,வெள்ளி இந்த மூன்று நாட்களிலும் இடதுபுற நாசித்துவாரத்தின் வழியாக காலை 4லிருந்து 6 மணிவரை சுவாசம் ஓடும்.அதன்பிறகு இரண்டு மணி நேரம் வலதுபுறம் இப்படி மாறி மாறி ஓடிக்கொண்டிருக்கும்.இதுவே வளர்பிறை என்று சொல்லும்படியான அதாவது அம்மாவாசைக்கு மேலாக பௌர்ணமிக்கு உள்ளாக வரக்கூடிய வியாழக்கிழமையிலே வளர்பிறை வியாழக்கிழமையில் சந்திரக்கலையிலும்,தேய்பிறை வியாழனில் சூரியக்கலை சுவாசமாகவும் தொடங்கும்.ஆகவே அதிகாலையில் அந்த நேரத்தில் சுவாசத்தை நாம் கையை வைத்து பார்த்தோமென்றால் எந்தப் பக்கம் ஓடுகின்றது என்று தெரியும்.அப்படி மாறி ஓடுகின்றது என்றால் நம் உடம்பில் ஏதோ வியாதி வரப்போகின்றது என்று பொருள்.அப்படி இல்லையெனில் வியாதி ஏதோ சிறிய அளவில்  அங்கே தாக்கியிருக்கின்றது என்று

பொருள்.அப்படி சுவாசம் மாறி ஓடுகின்றபொழுது எந்த பக்கம் நமக்கு சுவாசம் ஓடவேண்டுமோ அதற்கு அடுத்த புறத்தில் சிறிய பஞ்சை வைத்து அடைத்துக்கொண்டோ அல்லது குருமுகாந்திரமாக சில வழிகளை அறிந்து கொண்டோ சுவாசத்தை மாற்றிவிட்டால் எப்படிப்பட்ட வியாதியையும் தடுத்துவிடலாம்.இதெல்லாம் அடிப்படை நிலைகள்.ஆகவே இந்த துறவு நெறியினாலும் மற்ற எந்த நெறியினாலும் அடையமுடியாத ஒரு நிலையை காட்டக்கூடியவர்கள்தான் சித்தர்கள்.ஏல்லாம்வல்ல பட்டினத்து பெருமானைப் போன்ற இஸ்லாமியராக பிறந்த பொழுதும் சாதி சமயங்களை எல்லாம் விட்டு விட்டு இறை நெறியை உணர்ந்து எல்லா இனத்தவரையும் தம் இனத்தவராய் இறையருள் நாட்டம் கண்டோரை அக இனத்தோராகவும் இறையருள் நாட்டம் இல்லாதவரை புற இனத்தோராகவும் கண்டு வாழ்ந்த எமது அப்பாவாகிய குனங்குடி மஸ்தான் சாகிபு அவர்கள் ஒரு பாடலிலே குறிப்பிடுகின்றார்கள்

சூத்திரப்பாவை கயிரற்று விழும்முன்
சூட்சமக் கயிற்றைப் பாரடா அதில்
சூட்சமக் கயிற்றைப் பாரடா

என்று கூறி பிறகு பின்னால் கூறுகின்றார்கள்.இந்த இறை நிலை அடைவதற்கு இப்படியெல்லாம் நீ அடையமுடியுமா?முடியாது என்று கூறி எப்படி அடையமுடியும் என்பதையும் மிக தெளிவாகக் கூறுகின்றார்கள்.

சாத்திரவேதம் சத கோடி கற்றாலும்
சமய நெறியினில் ஆசாரம் பெற்றாலும்
பாத்திரம் ஏந்தி புறத்தில் அலைந்தாலும்
பாவனையாலே உடல் உள்ளம் இளைத்தாலும்
மாத்திரைபோது எமன் வரும்போது
மற்றொன்று உதவாது உதவாது
சூத்திரமாகிய தோணி கவிழும்முன்
சுக்கானை மேற்படுத் திக்கனமே சொன்னே.

எவ்வளவு அழகாக சொல்லியிருக்கிறார்கள்.அப்பா இந்த நான்கு வேதங்கள் இருக்கிறதே இந்த நான்கு வேதங்களையும் நாம் கரைத்து குடித்து விட்டேன் என்று நீ இறுமாந்து இறந்து விடாதே.இது மாதிரி நான்கு அல்ல நான்கு கோடி வேதங்களை நீ அறிந்திருந்தாலும் இறைவனை உணர முடியாது.ஏனென்றால் வேதங்களே ஓ என்று சொல்லற்கு அறியானை.ஆகவே அதனாலும் நீ அறிந்து கொள்ள முடியாது. சரி ஏதோ ஒரு சமய நெறியை நீ கடை பிடித்துக் கொண்டு அந்த நெறியிலே ஒற்றி பிரளாது வாழ்ந்து வந்த போதும் இறைவனை நீ உணர முடியுமா? மரணமில்லாப் பெருவாழ்வை அடைய முடியுமா?அன்பே உருவாகி இறைவனை நீ அடைய முடியுமா?அடைய முடியாது.சரி இதெல்லாம் வேண்டாம் விட்டாச்சி. எல்லாவற்றையும் விட்டு விட்டு காட்டில் அமர்ந்து தவம் செய்தால் கிடைக்குமா?அப்பொழுதும் கிடைக்காது.சரி தவமும் வேண்டாம், இறை வழிபாடும் வேண்டாம் கிடைத்ததை சாப்பிட்டுவிட்டு அப்படியே பரதேசி போல திரிவோம். அப்பவும் கிடைக்குமா? கிடைக்காது என்றுதான் அதில் சொல்கிறார்.ஆகவே இப்படியெல்லாம் கிடைக்காத ஒரு பொருள் ஒரு வழியிலே கிடைக்கும் ஆகவே நீ தவ வழியிலே செல்லுகின்ற பொழுது உனக்கு தவ நிலைகளிலே சில சித்திகளைத் தரும்.அப்பொழுது சாமி சாமி என்று உன் கால்களில் வந்து விழுந்துவிடுவான்.ஆகவே அவனுக்கு மயங்கி இந்த மெய்யான நிலையை விட்டு விட்டு அந்த ஆசை புகழிலே போனால் நீ இறந்துவிடுவாய்.அல்லது இந்த யோக நிலையிலே சாகாக் கல்வியிலே நீ பயிலுகின்றபோது உனக்கு செல்வம் கோடி கோடியாக வந்து சேரும்.அப்ப இந்த செல்வமே நிலை என்று உனது மனதை திருப்பிவிடும்.அதிலேயும் சென்று நீ இறந்துவிடாதே.அல்லது இந்த

கலையை பயிலுவதற்கு முன்பாக உன்னுடைய மனைவியோ மக்களோ ஊராரோ உன்னை மதித்திருக்க மாட்டார்கள்.உன்னிடத்திலே ஏற்படக்கூடிய இறை வசிய சக்தியினாலே எல்லோரும் உன்பால் ஈர்க்கப்படுவார்கள்.அப்பொழுதும் நீ ஏமார்ந்துவிடாதே.அழகாகச் சொல்லுகிறார்.என்ன சொல்லுகிறார்?

உற்றார் உறவுமுறை யார்சூழ்ந்திருந்தென்ன
ஊருசனம் எல்லாம் உன்னைப் பணிந்தென்ன
பெற்றாரும் பெண்டீரும் யாரும் இருந்தென்ன
பேணும் பெரும் செல்வம் ஆணவத்தாலென்ன
கர்த்தன் பிரிந்திடில் செத்த சவமாச்சு
காணாது காணாது கண்டதெல்லாம் போச்சு
எத்தனை பேர் நின்று கூக்குரலிட்டாலும்
எட்டாமல் போய்விடும் கட்டையிலே
இந்த சூத்திரப்பாவை கயிரற்றுவிழும்முன்
சூட்சமக் கயிற்றைப் பாரடா அதை
சூட்சமக் கயிற்றைப் பாரடா.

என்று அந்தப் பாடல் போய்க்கொண்டே இருக்கும்.இதில் அவர் சொல்லக்கூடிய கருத்து அந்த சூட்சமமாகிய அந்த நிலை இருக்கிறதே நீ எந்த நிலையினாலும் அதை கண்டு கொள்ள முடியாது.இறைவனுடைய பரம்பொருள் சொரூபத்தை உணர்ந்து இறை நிலையாகிய அன்பு நிலையைக் கொண்டு அருள் நிலை சித்திகளை அடைந்த பொழுதும் எளிமையாக வாழுகின்றானே சித்தன் அவனுடைய திருவருள் கருணையினாலே அவன் காட்டிய நிலையினாலே உனக்கு உள்ளாக இந்திரிய ஒளியையும், கரண ஒளியையும்,ஜீவ ஒளியையும், ஆன்ம ஒளியையும் தரிசித்து ஐந்து விதமான தேகங்களையும் உணார்ந்து கொள்ள வேண்டும்.இப்ப சாதாரணமாக ஒரு நண்பர் வருகிறார் அல்லது எவரோ ஒருவரிடம் உங்கள் பெயர் என்ன என்று கேட்கின்றோம் ?அவர் சுப்பிரமணியம் என்று சொல்லுகிறார் என்று வைத்துக் கொள்ளுவோம் அவரிடத்திலே ஒரு கேள்வியை எழுப்புகின்றோம் ஐயா! சுப்பிரமணியம் என்று உங்கள் பெயர் சொன்னீர்களே உங்கள் கண்ணிற்கு பெயர் சுப்பிரமணியமா அல்லது காலிற்கா,தலைக்கா என்று ஒவ்வொன்றாக கேட்டுக்கொண்டே போனால் எது என்றே சொல்லத் தெரியாது ஏனென்றால் இந்த சுப்பிரமணியமாகிய இருந்த இவர் இவருக்குள்ளே இருக்கும் சிவமாகிய அந்த பிரணவத்தை தரக்கூடிய அதீத பொருள் அவரை விட்டு சென்றுவிட்டால் அவர் சவமாகி விடுகிறார்.ஐயோ பிணம் என்கின்றான்.கட்டிய மனைவி அன்பு கொண்ட மனைவியாக இருந்தாலும்
நீ பிணமாக இருந்தால் உன்னை பார்ப்பதற்கே பயப்படுவாள். உறவினர்கள் நாரப்போகின்றது சீக்கிரம் கொண்டுபோய் போடு என்கிறார்கள்.அப்ப எதற்கு பெயர் சொன்னார்.அந்த உடலை விட்டு அப்ப போயிடுச்சி அப்ப அந்த சுப்பிரமணியம் எங்கே போனார்?அவரைக் காட்டக் கூடிய நெறிதானய்யா இந்த நெறி அன்பு நெறி.அந்த ஒளி நெறி. ஆகவே இந்த ஒரு தேகம்தான் இருக்கின்றது என்று நினைத்துக் கொள்ளாதே.

உன் கண்ணுக்கு வெளியே தெரிகின்ற இந்த தோற்றம் இருக்கின்றதே வெளியே தெரியும்படியான் இந்த உடலுக்கு **ஸ்தூல தேகம்** என்று பெயர்.ஸ்தூலம் என்றால் கண்ணுக்கு தெளிவாக இருக்கும்.ஆக இதில் மட்டும் பற்று வைத்துக் கொள்ளாதே.அல்லது இந்த ஸ்தூல தேகத்தை மருந்துகளினால் காயசித்தி செய்து கொண்டாலும் நீ அழியாமல் இருக்க முடியுமா? முடியாது.

காரணம் அடுத்ததாக உள்ளே **சூட்சம தேகம்** என்று ஒன்று இருக்கின்றது.இந்த சூட்சும

தேகம் எது என்றால் மனம் என்ற நிலை இருந்து கொண்டு மனம், சித்தம், புத்தி, அகங்காரம் கூட்டங்கள் இருக்கிறதே இதனால் இந்த உடலை நடத்துகிறதே அந்த உடம்பிற்கு பெயர் சூட்சம தேகம் என்று பெயர்.அதாவது சூட்சம தேகம் என்பது கண்களுக்கு புலப்படாது ஆனால் உணர்வினாலே அறிந்து கொள்ள முடியும்.இப்பொழுது மனிதனுடைய கைகளோ,கால்களோ இயங்குவதற்கு கையை தூக்கு,காலை தூக்கு இதை எடு இங்கே போ அங்கே போ இதை பார் என்று உணர்வு சொல்கிறது இல்லையா அதற்கு பெயர் தான் மனம்.அந்த மனம் சம்மந்தமான உடலுக்குத்தான் சூட்சம உடம்பு என்று பெயர்.சாதாரணமாக இந்த பக்கவாதம் நோயை எல்லோரும் பார்த்து இருப்போம்.இதை அலோபதி மருத்துவரிடம் சென்றால் அவர் சொல்வார் இந்த இரத்தம் க்ளாட் ஆகிவிட்டது.கை கால் விழுந்து விட்டது என்பார்.இனி மனசு தூக்கனுைலும் தூக்க முடியுமா?முடியாது.ஏன்? அங்கே போகக்கூடிய நாடி நரம்பு அங்கே வேலை செய்யவில்லை.இப்படி ஒரு நரம்பிற்கே இந்த கதி என்றால் இந்த மனமானது நாடி நரம்புகளோடு சேரவில்லை என்றால் நீ என்ன ஆகிவிடுவாய்?ஒன்றும் இல்லாமல் ஆகிவிடுவாய்.ஆகவே இந்த மனம் என்று சொல்லுவது இரண்டாவது உடம்பு.சூட்சம தேகம்.

அடுத்ததாக **காரிய தேகம்**.காரியம் என்றால் நமக்கு எல்லாமே சாதாரணமாக தெரியும்.ஒரு காரியம் நடக்க வேண்டும் என்று சொல்கிறோம்.ஆகவே இந்த மனம் இயங்குவதற்கு எது காரியமாக இருக்கிறது?ஓடுகின்ற சுவாசம்.இந்த சுவாசமானது ஓடவில்லை என்றால் மனம் வேலை செய்யுமா?வேலை செய்யாது.இந்த உடற் காரண கருவிகள் வேலை செய்யுமா?செய்யாது.அகவே இந்த சுவாசம் இருகின்ற வரைதான் இந்த மனம் வேலை செய்கின்றது.அழகாக சொல்லியிருக்கின்றார்கள்."மன்மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு.மன்மனம் எங்கில்லை வாயுவும் அங்கில்லை".சுலபமாக புரியும்.ஆகவே இந்த மனமானது இயங்குவதற்கும் இந்த உடற் கருவிகள் இயங்குவதற்கும் காரியமாக இருக்கக்கூடியது சுவாசம்.ஆனால் எத்தனையோ பேர் அறியாமையினாலும் அறிவின்மையினாலும் இந்த காற்றுதான் உடலை இயக்குகின்றது இந்த காற்று போச்சு என்றால் இந்த உடல் இயங்காது என்று அறிவின்மையால் நினத்துக்கொள்வார்கள்.இந்த சுவாசமானது உதிக்கின்ற இடம் ஒன்று உண்டு அது ஒடுங்குகின்ற இடம் ஒன்று உண்டு.இந்த 72,000 நாடி நரம்புகளைப் பற்றி உச்சி முதல் சிரசு வரை இந்த உடலை இயக்கும்படி இருக்கும் காரணம் ஒன்று இருக்கின்றது என்பதை அறிந்துகொண்டவர்களே சித்தர்கள்.

அதுவே **காரண தேகம்** என்று பெயர்.அப்ப எது காரண தேகம்?இந்த சுவாசத்தையும் இந்த மனதையும் உடலையும் இயக்குவதற்கு எது காரணமாக இருக்கிறது?ஜீவன் என்கின்ற உயிர்.ஆகவே உயிரில்லாவிட்டால்
இந்த மனம் வேலை செய்யுமா?உயிர் போச்சென்றால் எல்லாமே போச்சு.ஆனால் இந்த உயிரே நீ என்று எல்லோரும் அறியாமையில் நினைத்துக் கொண்டிருப்பார்கள்.அந்த உயிரும் நீ அல்ல.இதைத்தான் எல்லாம்வல்ல திருமூலப் பெருமானும் சொல்லியிருக்கின்றார்கள் இந்த மரணமில்லாத பெருவாழ்வை நீ அறியவேண்டும் என்றால் ஒரு ரகசியத்தை அறிந்து கொள்ள வேண்டும். பிறப்பை அறக்க வேண்டும் என்றால் இறப்பை நீக்க வேண்டும் என்றால் இந்த நெறியை நீ அறிந்து கொள் என்கின்றார்.என்ன சொல்கின்றார்?

இக்காயம் நீக்கி இனியொரு காயத்தில்
புக்கு பிறவாமல் போகும் வழி நாடுமின்
எக்காலம் இவ்வுடம்பு வந்தெனக்கு ஆனதென்று
அக்காலம் வுண்ண அருள் பெறலாகுமே.

இப்பொழுது இந்த மனித தேகம் எடுத்து இருக்கின்றோம்.இதற்கு முன் ஜென்மத்திலே மரமாக இருந்தோமோ,புழுவாக இருந்தோமோ,நாயாக இருந்தோமோ,புல் பூண்டாகா இருந்தோமோ

என்னவாக இருந்தோமோ ?யாருக்குத் தெரியும்.தன் நிலையை தன்னை அறிய தனக்கொரு கேடில்லை என்று "தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே" என்றாறே தன்னை அறிந்து கொண்டவனுக்கு ஆதியிலே அவனுக்கு எப்பொழுது இந்த உடல் எடுத்ததோ அதிலிருந்து இன்று வரை தெரியும்.அப்படி ஒரு நிலையை நீ அறிந்து கொண்டால்தான் இந்த உயிர் என்பது யாது நீ என்பது யாது இந்த பிராணன் என்பது யாது இந்த சுவாசம் என்பது யாது இந்த மனம் என்பது யாது இந்த 96 ஆ 36 ஆ இந்த தத்துவம் என்பது யாது என்று அப்பத்தான் புரியும்.ஆகவே **மாகா காரண தேகம்** என்ற ஒன்று உண்டு அதுதான் இறைவனுடைய இறை நிலை அடைந்த இந்த உடலையும் உயிரையும் சேர்ப்பதும் பிரிப்பதும் எல்லா சித்து விளையாட்டையும் செய்யக்கூடிய மெய்சித்தாகிய பரசிவம்.ஆகவே இப்படி ஐந்து உடல் ஸ்தூல உடல்,சூட்சம உடல்,காரிய உடல்,காரண உடல்,மகா காரண உடல் என்று ஐந்து விதமான உடலை கடவுள் மனிதனுக்கு கொடுத்து இருக்கின்றான்.வேறு எந்த உயிரினத்திற்கும் இல்லை.ஆகவே இந்த ஐந்து வித தேகத்திற்குள்ளே ஏழு விதமான ஒளிதிரைகளை 72,000 நாடி நரம்புகளும் சேரக்கூடிய புருவ மத்தியிலே கொடுத்திருக்கிறான்.அந்த ஏழு திரைகளையும் குருவருள் வல்லபத்தாலே நீக்குகின்ற பொழுதுதான் நீ அங்கே இறைவனை காண முடியும்.ஏனென்றால் வள்'ளல் பெருமான் குறிப்பிடுகின்றார்கள்

"உரைமனம் கடந்த ஒருபெரு வெளிமேல் அரசு செய்தோங்கும் அருட்பெரும்சோதி"என்று.இந்த மனமானது எப்பொழுது ஆராய்ந்து கொண்டிருக்கிறதோ எப்பொழுது இயங்கிக்கொண்டிருக்கிறதோ அதுவரை நீ கடவுள் என்னன்னு கூட அடி முடியைக் கூட பார்க்க முடியாதப்பா.உனது மனமானது ஏதோ ஒரு தெய்வத்தின் மேலே ஒன்றிய காரணத்தினாலே உனக்கு உள்ளே இருக்கக்கூடிய பிராண சக்தி அந்த உருவம் எடுத்து வரும்.அதில் ஏமார்ந்து விடாதே.ஆகவே இந்த உறை மனம் கடந்த வெளியை கொண்டுபோகிறதிற்கு பெயர்தான் சாகாக்கல்வி.அங்கு கொண்டு போவது மட்டும் அல்ல அங்கே கொண்டு போய் இந்த மனமே உயிர் என்று அறிய வைக்கும் நெறிதான் காகபுஜண்டர் நெறி.ஞானம் 80 லே குறிப்பிடப்பட்டிருக்கின்றது "அறியலாம் மனம் தானே உயிர்தானாகும் அண்டத்தில் சென்றிடவே முக்தியாகும்".ஆகவே இங்கு புருவ மத்தி எது என்று கேட்டு பதில் சொல்லுகின்றார் "பாரப்பா புருவமத்தி ஏதன்றாக்கால் பரபிரம்மம் ஆனதோர் அண்ட உச்சி "இதுவும் காகபுஜண்டர் ஞானம் 80 லே உள்ள பாடல்.ஆகவே இந்த உடலுக்குள்ளே இருக்கும் படியான இந்த ஐந்து நிலைகளையும் காட்டி மரணமில்லாத நெறிக்குக் கூட்டிச் செல்வதே காகபுஜண்டருடைய சாகாக்கல்வி உபதேசம்.

உபதேசம் என்றால் என்ன?எத்தனையோ பேர் வந்து ஐயா சாமி எனக்கு உபதேசம் கொடு என்பர்.உபதேசம் என்னன்னு கேட்டால் அதான் எல்லாருக்கும் கொடுப்பீர்களே அதை எனக்கும் கொடுங்கள் என்பார்.ஆக உபதேசம் என்பது எது? தீட்சை என்பது எது?சித்தர்கள் எதைச் சொன்னாலும் ஏன் எதுக்கு எப்படி என்று கேட்டு வாங்கிக்கொள் அனுபவித்து வாங்கிக்கொள் என்கின்றார்கள்.தீ என்பது மலம்.மலம் என்பது என்ன என்று கேட்டால் நமக்கு நன்மைக்கு எதிராக இருப்பது மலம்.இறைவனை அடைய வொட்டாமல் இருப்பது மும்மலம் **ஆணவம், கன்மம், மாயை** இந்த மூன்றும் இருள் நிலையிலே இருக்கின்றது.இந்த தீயாகிய மலமாகிய இருளை எது நீக்குகிறதோ அது தீட்சை.சை என்றால் நீக்க வல்லது.ஆகவே அறியாமை என்னும் இருளை ஓட்டி அறிவு மயமான அன்பு மயமான அருள் மயமான இறைவனை காட்டி உன்னையும் அந்த நிலைக்கு ஏற்றுகிறது பார் அதற்கு பெயர் தான் தீட்சை.நம்முடைய தாய் மொழியாம் தமிழிலே அதற்கு உபதேசம் என்கின்றோம்.தேசம் என்றால் ஒரு நாடு.இது எங்களுடைய பாரத தேசம்,இது சிங்கப்பூர்,பாக்கிஸ்தான்,வங்காளதேசம் என்று எப்படியோ சொல்கிறோம்.அந்த நாட்டிற்கு சென்றால்தான் அந்த நாட்டை பார்க்க முடியும். அதுபோல் தானாகிய தேசத்தை அடைவதற்கு எது உபகருவியாக இருக்கிறதோ அது உபதேசம்.ஆகவே இந்த உபதேசத்தை எத்தனையோ பேர் எத்தனையோ வழிகளிலே காட்டுகிறார்கள்.நாம் சொல்லிக் கொடுக்கக்கூடிய மெய்த்தவ நிலையாகிய சாகாக்கல்வியில் என்ன விசேஷம்.எதிலும் இல்லாத என்ன இங்கே இருக்கிறது?அதைத்தான் பார்க்கப்போகிறோம்.

இதில் தச தீட்சைகள் என்று பத்துவிதமான படிகள் உண்டு.ஆரம்ப நிலைகளிலே அவரவர் வணங்கக்கூடிய எந்த தெய்வமோ அந்த தெய்வம் சம்மந்தமான மந்திரத்தை சொல்லிக்கொடுத்து பிறகு மெய் நிலையை காட்டுவோம்.நீயே அறிந்து கொள்வாய் இது எப்படி என்று கேட்டால் ஒரு கிராமத்திலே ஒருவருக்கு ஒரே ஒரு குழந்தை.அதுவும் குழந்தையே இல்லாமல் போகாத கோவிலுக்கு எல்லாம் சென்று பிறந்த குழந்தை அது.பிறப்பிலே இறைஅருளாலே அந்த குழந்தைக்கு அறிவு இருக்கிறது.அந்த குழந்தைக்கு நான்கு ஐந்து வயதாக இருக்கும்பொழுது அப்பாவிடம் அப்பா அப்பா எனக்கு யானையை பார்க்கவேண்டும் என்று தொந்தரவு செய்தது.யானை எப்படி இருக்கும் என்று கேட்டது?அதற்கு அவர் யானை கறுப்பக மிக பெரியதாக இருக்கும்.அது போல் பெரிய விலங்கு எதுவும் கிடையாது.அதுக்கு நான்கு கால்கள் பெரிய தூண்கள் போன்று இருக்கும்.எந்த விலங்கிற்கும் இல்லாதது போல் தும்பிக்கை ஒன்று இருக்கும் என்று கதை சொல்கின்றார்.பிறகு அந்த குழந்தை விளையாடச் சென்று விடுகின்றது.அந்த குழந்தைக்கு ஏழு வயதாக இருக்கும்பொழுது மீண்டும் ஞாபகம் வந்து அப்பா அப்பா யானையை பார்க்கவேண்டும் என்று கேட்டபொழுது ஒரு படத்தைக் பார்த்தாலே புரியும் என்பதால் அவர் ஒரு பெரிய வெள்ளைத் தாளை எடுத்து யானையை மிக அழகாக வரைந்து காட்டுகிறார்.அந்த குழந்தையும் திருப்தி அடைந்து சென்று விடுகின்றது.பிறகு அந்த குழந்தைக்கு பத்து வயதாக இருக்கும்பொழுது தொலைக்காட்சியிலே ஒரு முறை யானைவருவதைப் பார்த்த அப்பா அந்தக்குழந்தையை அழைத்து அதோ பார் அதுதான் யானை என்று அந்த குழந்தையிடம் காட்டினார்.அந்த குழந்தையும் பார்த்து மகிழ்ந்து சென்றுவிடுகிறது,அதற்குப்பிறகு ஒருமுறை சென்னையில் உள்ள ஒரு கோவிலுக்கு தன் குழந்தையை அழைத்துக் கொண்டு அவர் செல்கிறார்.அங்கே அவர் பல கவலைகளுடன் தன்னை மறந்து ஏதோ நினைவுடன் சென்றதால் அங்கே ஒரு யானை செல்வதைக்கூட கவனிக்காமல் செல்கிறார்.பலர் செய்யும் தவறு என்ன என்று கேட்டால் வீட்டில் இருக்கும் பொழுது சாமி கும்பிடவேண்டும் என்று நினைப்பர்.ஆனால் கோவிலுக்கு வந்த உடன் தன்னையும் மறந்து தன்னைஅறியக்கூடிய நிலையையும் மறந்து விடுவர்.கோவிலுக்கு வந்தால் இறைவனை மட்டும்தான் நினைக்க வேண்டும். அப்படி அவர் கவலைகளுடன் செல்லும் பொழுது அந்த குழந்தைஅப்பா அப்பா அதோ பாருங்கள் யானை என்று அந்த குழந்தையே தந்தைக்கு யானையை காட்டுவது போல் இந்த தச தீட்சைகளிலே ஒன்பது தீட்சைகளிலும் யானையை உவமானப் படுத்தி எப்படி ஆரம்பத்திலே சைககளிலே காட்டி பின் வரைந்து காட்டி பின் தொலைக்காட்சியில் காட்டி இப்படி மூன்று நிலைகளிலே காட்டிய பொழுது நாலாவது நிலையிலே அந்த குழந்தையே தந்தைக்கு காட்டுவது போல ஒன்பது விதமான தீட்சையிலே காட்டி காட்டி வருகின்ற பொழுது பத்தாவது தீட்சையிலே தன்னைத்தானே உணர்ந்து கொள்ளுவான்.அப்படிபட்ட மகா சிறப்பு வாய்ந்ததுதான் இந்த தீட்சை.

சரி.ஏற்கனவே ஐந்து விதமான உடம்பைச் சொன்னோம்.இந்த கருவிகள் இருக்கிறது.மாணிக்கவாசகப் பெருமான் அழகாகச் சொல்லுகிறார்.
ஆண்டவன் இந்த கண்,காது எல்லாம் எதற்கு கொடுத்தார் என்றால் இறைவனை புறத்தில் உணர்ந்து கொண்டு அகத்திலே நெட்குருகி எல்லாம்வல்ல இறைவனை உணர்வதற்கு.ஆனால் இந்த புலன்கள் விடுகிறதா?என்ன சொல்லுகின்றார்."மாறி நின்று என்னை மயக்கும் பஞ்ச புலன் ஐந்து" இறைவா நான் உன்னை நோக்கி வருவதற்காக இந்த ஐந்து புலனைக் கொடுத்தாயே ஆனால் இவை மாறி நின்னு மயக்குதே ஆனால் அடைத்த வழியையும் சொல்லுகிறார்.ஆகவே புறத்திலே தான் போன போக்கிலே போகிற வரை இது தன்னை உணர முடியாது.சாதாரணமாக ஒரு டிரான்ஸ்பார்மர் இருக்கிறது. அந்த டிரான்ஸ்பாரமர் என்றால் ஒரு ஜெனரேட்டரிலே மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு ஜெனரேட்டரில் இருந்து அங்கே டிரான்ஸ்பாரமரில் இருந்து கரண்ட் போய்க் கொண்டு இருக்கிறது.போயிக்கிட்டே இருக்கிற வரைக்கும் அது சூடாகவே இருக்கும்.எப்போ டிரான்ஸ்பார்மை நிறுத்தி வைக்கிறமோ அப்பொழுது சூடு

இருக்காது.அப்பொழுதுதான் ஒரு குளுமை உண்டாகும்.அதுபோல இந்த புலன்களெல்லாம் வெளியே போய்க்கிட்டு இருக்கும்வரை கண் வெளியே பார்க்குது காது வெளியே கேட்கிறது மூக்கு சுவாசிக்கிறது வாய் பேசுது.எல்லாத்தையும் இரண்டாக படைத்த கடவுள் வாயை மட்டும் ஒன்றாக படைத்தான் ஏன் தெரியுமா?கொஞ்சமாக பேச வேண்டும் என்பதற்காக,கொஞ்சமாக உண்ண வேண்டும் என்பதற்காக.ஆனால் நாம் உண்ணுவதும் அதிகம்.பேசுவதும் அதிகம்.இப்படி வெளியே போகின்ற புலன்கள் எல்லாம் நிற்கிறபொழுது ஒரு குளிர்ந்த தன்மை ஏற்படுகிறது.அப்படி நின்றுபோன வெளி நோக்கி ஓடுகின்ற அந்த புலன்கள் எல்லாம் குருமுகாந்திரமாய் அகம் நோக்கி திருப்புகின்ற பொழுது இந்த புலன்கள் எல்லாம் போய் ஒரு இடத்தில் ஒடுங்கும்.அப்படி ஓடுகின்ற பொழுது ஒரு ஒளி தோன்றும்.அந்த ஒளிக்குப் பெயர் **இந்திரிய ஒளி** என்று பெயர்.இந்திரிய ஒளி என்றால் இந்திரியங்களால் ஏற்பட்ட ஒளி.அது எப்படி இருக்கும்?வானத்து நட்சத்திரத்தைப் போன்று பிரகாசமாக இருக்கும்.ஆகவே அதற்கு இந்திரிய ஒளி என்றும் நட்சத்திர ஒளி என்றும் பெயர்.இப்படியே இந்த வெளியே போன புலன்கள் எல்லாம் குருமுகாந்திரமாய் மனத்திலே சென்று ஒடுங்குகின்றது.அப்படி மாந்த்திலே ஒடுங்குகின்றபொழுது மனம் கற்பனை உலகம் கனவு உலகம் அறியாமையிலே மயங்குகின்ற அறிவு உலகம் இப்படி சிந்தனையை எல்லாம் விட்டு விட்டு ஏகமுகமாய் சிந்திக்க வேண்டும்.அது என்ன ஏகமுகம்?.சாதாரணமாய்ச் சொல்லுகிறோம்.மனதிலே எத்தனையோ நினைக்கிறோம். பலவற்றை நினைக்கும் பொழுது அதற்கு சந்தை என்று பெயர்.பலவற்றை மனமானது நினைக்காமல் ஒன்றே நினைத்தால் அதற்கு சிந்தை என்று பெயர். இந்த புலன்கள் எல்லாம் அடங்கிய பொழுதும் தான் ஏற்கனவே எதிலோ ஒன்றில் லயித்து இருப்பான்

ஒரு பணம் பொருள் சேர்க்க நினைத்து இருப்பான்.பணம் சம்மந்தமான கோடீஸ்வரன் போல் கனவு வரும்.விடிந்து பார்த்தால் அடுத்த வேலைக்கு சாப்பாடு கூட இருக்காது அது வேறு விசயம்.ஏதோ ஒரு அழகான பெண்ணை நினைத்து இருப்பான்.அந்த பெண் கனவில் வந்துவிடும்.இப்படி மனம் ஒடுங்கிய பொழுதும் அவனுக்கு பிரயோஜனம் இல்லை.இதுமாறிதான் எத்தனையோ பேர் தியான நெறி இருக்கிறது.அப்படியே குறட்டை விட்டு தூங்குகிறவனும் இருப்பான் கேட்டால் சமாதி நிலை என்பான்.அறியாமை.ஆகவே வெளி நோக்கி போகின்ற அந்த புலன்களை ஒடுக்கி மனதிலே லயமாக்கி அந்த மனமானதும் ஓடாமல் ஒரு நிலைப்படுத்த வேண்டும்.அதுதான்

"தன்னை அறிந்தின்பமுற வெண்ணிலாவே ஒரு தந்திரம் நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே"ஏன் கேட்கிறாய்?"ஐந்தலைப் பாம்பாட்டுகின்றார் வெண்ணிலாவே அவர் ஆடும் வகை எப்படியோ வெண்ணிலாவே" வெண்ணிலவு என்று ஏன் குறிப்பிட்டார் என்றால் இந்த மனமானது சுவாசம் என்கின்ற உதித்த இடத்திலே சென்று ஒடுங்குகிற பொழுது பௌர்ணமி நிலவு எப்படி இருக்கும் அது போன்ற ஜோதி தோன்றும்.அந்த நிலவு போன்ற ஜோதி தோன்றும்.இதற்கு மதி பிரகாசம் என்றும்,நிலவு பிரகாசம்,மனப் பிரகாசம் என்றும் பெயர்.அப்படிப்பட்ட ஒளி நிலையைப் பார்க்கின்ற பொழுது அங்கே என்ன தோன்றும்? ஐந்து விதமான ஒளிகள் தோன்றும்.இந்த புலன்கள் ஒளி. அப்ப அதன் வழியே செல்லுகின்ற பொழுது உன் புலன்கள் என்னவற்றை விரும்பியதோ அது சம்மந்தமான கனவைக் காட்டி உன்னை ஏமாற்றி விடும்.ஆகவே அதைக் கடந்து பௌர்ணமி நிலவு என்ற மதி என்கின்ற ஒளியைப் பார்ப்பதற்கு குரு காட்ட வேண்டும்.சரி இப்போ மனம் ஒடுங்கி ஏக சிந்தையாகி விட்டது.அதைத்தான் என்ன சொல்லுகின்றார்?அழகாக திருமந்திரத்திலே திருமூலப் பெருமான் சொல்லுகின்றார்

சிந்தையதென்ன சிவன் என்ன வேறில்லை
சிந்தையின் உள்ளே சிவமும் வெளிப்படும்
சிந்தை தெளிய தெளிய வல்லார்க்கு
சிந்தையினுள்ளே சிவன் இருந்தானன்றே

ஆகவே ஏகமுகமாக சிந்தனை வந்தபொழுதும் நீ பெரிதாக ஒன்றும் சாதித்து விட முடியாது.அப்படி ஏக சிந்தனை ஆக்கியதை குருமுகாந்திரத்தால் சித்தனால் அறிந்துகொண்டு அழுது தொழுது மெய்வாசியை அறிந்து கொண்ட பொழுது நீ அங்கே சிவகதியாம் மெய்கதியினாலே சிவனை அறிந்து கொள்ளலாம்.அப்போ அங்கே மேலே

போகின்றபொழுது இப்படி அசைந்து சுவாசமும் நின்றுபோச்சு மனசும் நின்றுபோச்சு அப்போ மேலேபோய் பிராணனும் நிற்கின்றது.அப்பொழுது தோன்றுகின்ற ஒளியே சூரிய பிரகாசம். ஆகவே இவை எல்லாடிவற்றையும் இயங்குவதற்கு காரணமாகிய ஆத்மாவின் மேல் நிலையாகிய அதீத நிலையாகிய அக்கினி பிளம்பாக தோன்றக்கூடிய மகாகாரண உடல் இருக்கிறதே அந்த நிலையில் இருக்கிறபொழுதுதான் இந்த உலகில் இருக்கும் படியான பஞ்ச பூதங்கள் எது?அந்த அகத்திலே இருக்கும்படியான பஞ்சபூதங்கள் எது என்பதையும் தெரிந்து கொண்டு ஒவ்வொரு பஞ்ச பூதங்களிலும் இந்த பஞ்சபூத கூறுகள் எப்படி சேருகின்றன பிரிகின்றன என்பதையும் தெரிந்து கொண்டு எல்லா ரகசியங்களையும் அறிவின் அதீத மெய்ஞான நிலையிலே கண்டுகொண்ட காரணத்தினாலே மரணம் இல்லாமல் இருக்கலாம் வேண்டிய வரங்களை எல்லாம் பெறலாம்.இப்படிப்பட்ட அதீத ஒளி இருக்கின்றதே இந்த ஒளியை எல்லாம் முதல் முதலாக உனக்கு தொட்டு தீட்சை கொடுக்கின்ற பொழுதே அந்த ஜோதியை அகஆன்ம மெய்யறிவு ஜோதியை உனக்குள்ளே காட்டுகின்றது வேறு எந்த உபதேசத்திலும் உலகில் எந்த மார்க்கத்திலும் கிடையாது.அப்படி பார்க்கின்றபொழுது நீ பார்க்கும்படியான அந்த ஜோதி அருட்பெரும்ஜோதி இருக்கிறதே அந்த ஜோதியை பார்ப்பதற்காகத்தான் அல்லும் பகலும் பல இடங்களில் எல்லாம் திரிந்து அலைந்த பொழுதும் காணாததை மனம் உருகி அந்த குரு வல்லபத்தால் அறிந்து கொண்டவரகள்தான் ஒவ்வொரு சித்தர்களும்.அப்படி அந்த சித்தர்கள் காட்டிய மெய் நெறியை காட்டுவதே இந்த மரணமில்லாப்பெருவாழ்வு.அப்படி முதல் தீட்சையிலே அந்த அருட்பெரும்ஜோதியை காட்டி அவரவர் வணங்கும்படியான தெய்வநிலை உபதேசங்களை காட்டி முன்பு சொன்ன யானை கதையைப்போல பின்பு மெய்யான வாசி நிலையைக் காட்டுவதே நம்முடைய தீட்சை.முதல் நான்கு தீட்சை வரைக்கும் நாம் சார்ந்து இருக்கக்கூடிய சமய வழிபாடுகளிலே கொண்டு சென்று கடைசியில் யானை எது என்று கேட்டவன் தானாகவே காட்டியது போல முடிவு நிலையான தச நிலையை காட்டும்படியான அற்புத தீட்சை.இந்த வாசி என்பது என்ன?" வாசி வாசி என்றுரைத்தார் வெண்ணிலாவே அந்த வாசி என்ன பேசுகண்டாய் வெண்ணிலாவே" நிறையப்பேரை பார்த்திருக்கிறேன் நான் வாசியிலே வாங்கியிருக்கிறேன்,பிரம்ம வித்தை கற்றிருக்கின்றேன் என்று மூச்சை மேலேயும் கீழேயும் இழுத்துக்கொண்டிருப்பார்.இப்படி மூச்சை மேலேயும் கீழேயும் இழுப்பதா வாசி.அது அவரவர்கள் செய்த பாவம்.ஆகவே **வா** என்கின்ற எழுத்தானது நம்முடைய கண்டத்தின் உச்சியிலே அண்ணாவுக்கு கீழே இருக்கும்படியான அதீதமான காற்றினை குறிப்பது. **சி** என்பது உச்சியிலே இருக்கும்படியான சுத்த அக்கினியை குறிப்பது.நம்முடைய உடலிலே ஐந்து விதமான அக்கினி உண்டு.ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு.முதலிலே உள்ளது மூலாக்கினி என்று பெயர்.

**மூலாக்கினி** என்றால் இந்த உடலிலே உயிர் நிலைத்திருப்பதற்கு எது காரணமோ அது மூலாக்கினி. சாதாரணமாக ஒருவர் பேசும்பொழுது கேட்போம்.ஏண்டா உனக்கு சூடு சொரனை இல்லை என்றுகேட்பார்.அப்போ இந்த உடலிலே உயிர் இருப்பதற்கு எது அடையாளம் என்று கேட்டால் இந்த சூடுதான்.சித்தர்கள் சீவசமாதி அடைந்து இந்த ஜீவசமாதியிலிருந்து நிற்வகல்ப சமாதி கற்பசம்மதி ஜோதி இப்படி பல நிலை இருக்கிறது.ஜீவசமாதி அடைந்தான் என்பதற்கு இறந்துபோய் வைப்பதா ஜீவசமாதி.அது அல்ல.சில பேர் பார்த்திருப்போம் ஒரு நபர் இறந்துபோய் இருப்பார் அடுத்த நாள் பத்திரைக்கையில் விளம்பரம் கொடுப்பான் எல்லாம் வல்ல இறைவனுடைய திருவருட்கருணையினாலே எங்கள் தந்தையான சிவபாதம் அவர்கள் சிவனடியை அடைந்துவிட்டார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.அப்போ சிவனடியை அடைவது வருத்தமான செய்தியா?எவ்வளவு அறிவீனம்.ஆகவே அப்படி இல்லாமல் மரணமில்லாத அந்த பெருவாழ்வாகிய சிவகதியாகிய அந்த வாசியைக் காட்டக்கூடிய நிலை இருக்கிறதே

அதுதான் அற்புதமான நிலை.இது சூட்சமம்.இந்த உடலிலே கடவுள் எல்லாத்தையும் நமக்கு கொடுத்திருக்கிறார்.இந்த உலகமாகிய அண்டத்திலே நாம் இன்றுவரை விஞ்ஞானப்பூர்வமாக பார்க்கக்கூடிய ஒவ்வொரு அதிசயங்களும் ஒவ்வொரு அனுபவங்களை எல்லாம் நமக்குள்ளேயே கொடுத்திருக்கிறார்.இதைத்தான் ஞானிகள் அண்டத்தில் உள்ளது பிண்டம் பிண்டத்தில் உள்ளது அண்டம் என்று சொன்னார்கள்.ஆகவே வாசி என்பது இந்த உள்ளே உச்சியிலே இருக்கக்கூடிய அக்கினி இருக்கிறதே அந்த அக்கினியை சேர்க்குறத்துக்குத்தான் பெயர்.ஆகவே மூலாக்கினி என்பது இந்த உடலிலே உயிர் நிலைத்திருக்கிறது என்பதற்கு சாட்சியாக அல்லது இருப்பதற்கு எது காரணமோ அது மூலாக்கினி.இது உடலெங்கும் பரவி இருந்தாலும் நம்முடைய முதுகு தண்டிலே பதினெட்டு விதமான முடிச்சு உண்டு அதுதான் ஐயப்பன் கோவிலே பதினெட்டு படிகள்.இதன் வழியாக மேலே ஏறிப் போய் அங்கே விந்துவானது விந்து என்றால் இந்த வெளியே தெரியக்கூடிய சுக்கிலமா?அது அல்ல. இந்த ஒளியானது நம்முடைய புருவமத்தியாகிய எல்லா நாடி நரம்புகளும் சேருகின்ற இடத்திலே அங்கே மணியாக உருண்டு சூரியப்பிரகாசமாய் இருக்கிறது அதுவே மணிகண்டம்.ஆகவே அங்கே கீழே இருக்கக்கூடிய அந்த குண்டலி சக்தியாகிய அந்த மூலாக்கினி இருக்கிறதே அது மேலாகிய உச்சிலே சிரசிலே இருக்கும்படியான சிவனான ஞானக்கினி என்று சொல்லக்கூடியது போல மெய்யறிவோடு சேருகிறபோதுதான் அங்கே இருக்கக்கூடிய மெய்யறிவு உன்னுடைய உடலிலே ஒவ்வொரு நாடி நரம்புகளிலும் ஐக்கியமாகி இந்த உலகத்தில் இருக்கக்கூடிய எல்லா அறிவையும் உனக்கு கொடுக்கும்.சாதாரணமாக எல்லா மனிதனுக்கும் மூளையிலே அணுத்திசுக்கள் உண்டு.அதில் 95% அறிவு வேலை செய்யாமல் இருக்கிறது.ஒருவன் ஏதோ ஒரு துறையிலே அறிவு பெற்றிருக்கின்றபொழுது ஏதோ 10% அல்லது 20% வேலை செய்யும் மற்ற 80% வேலை செய்யாமல் இருக்கிறது.ஆனால் சித்த நெறியிலே நீ முயலுகின்றபொழுது ஒவ்வொரு அணுவும் அறிவுநிலையைப் பெற்று சர்வ அறிவுகளை நீ பெறக்கூடியதுதான் இந்த சாகாதகல்வி.அப்படி மேலே இந்த மூலாக்கினி சேராமல் இருப்பதற்கு என்ன காரணம்?மூன்று தடையாக இருக்கிறது.அதுதான் மும்மலம்.**கோபாக்கினி, காமாக்கினி, தாபாக்கினி. .** சில பேர் ஞான நெறியிலே மேலே ஏறிவருவார்கள்.சாதாரண மனிதனாக இருந்தாலும் சரி யோகியாக இருந்தாலும் சரி வருகிறபொழுது சில அற்ப சித்திகளை அடைந்தவுடன் அவனுக்கு கோபம் வரும் இந்த கோபத்தினால் என்ன ஆகும்? கோபத்திற்கு என்ன ஒரு பெரிய இது என்று கேட்டால் வள்ளல் பெருமான் சொல்கிறார் "காம உட்பகைவனும் கோபவென்கொடியனும் கனலோப முழு மூடனும்" இந்த கோபம் என்ன என்று கேட்டால் மற்ற விசயம் எல்லாம் எதிரியை அழித்துவிட்டு இவனை அழிக்கும் ஆனால் இந்த கோபம் அந்த அசுத்தாக்கினியை அதிகமா பெருக்கி இவனுடைய குண்டலி சக்தியும் போயி இவனுடைய இதயம் நுரையீரல் மற்ற கருவியெல்லாம் வேகமாக வேகவைத்து சீக்கிரம் சாவிற்கு கொண்டுபோய் விடும். அதனால் யோகிக்கும் கோபம் கூடாது.சரி இப்ப நீ கோபத்தை அடக்கிவிட்டாய்.இன்னும் மேலே செல்லுகிறபொழுது காமம் வந்து இவனை கீழே தள்ளிவிடும்.அப்படி காமத்தையும் அடக்கி கோபத்தையும் அடக்கிவிட்டால் தாபம்.தனக்கு இல்லை அவனுக்கு கிடத்துவிட்டது என்ற நினைப்பு. இந்த மூன்று விதமும் உன்னை கீழே தள்ளும்.இந்த மூன்றையும் நீக்கி மூலாக்கினி ஞானக்கினியோடு சேருகிறபொழுதுதான் அந்த சிவசிந்தனை என்கின்ற அன்பு நிலையை நீ அடைய முடியும்.அப்படி அடைவதற்கான பயிற்சிதான் வாசி.இந்த காகபுஜண்டர் வழியிலே வந்த இந்த வாசியின் சிறப்பு என்ன என்று கேட்டால் விஞ்ஞானப்பூர்வமாக சொல்லி உங்களுக்கு முடிக்கிறேன் நம்முடைய நாசியின் வழியாக உள்ளும் புறமும் காற்று சென்று கொண்டு இருக்கிறது உச்சியில் 72,000 நாடி நரம்புகளும் சேருகிற இடத்திலிருந்து வருகிற அதீத ஒளியினாலே நுரையீரலிலே இந்த காற்றானது சுத்திகரிக்கப்பட்டு பிராணனாக உட்செல்லுகிறது.நம்முடைய வயிற்றிலே அபாணன் எண்கின்ற ஒரு காற்று இருக்கிறது .இது சாப்பிட்ட சாப்பாட்டை எல்லாம் செரிக்க வைப்பதற்காக.இந்த அபாணன் என்பது ஒரு மின்னோட்டத்திலே நெகட்டிவ்சார்ஞ் என்று வைத்துக்கொள்ளுவோம் அதாவது எதிர் மின்சாரம்.நாம் சுவாசிக்கின்ற பிராணனானது பாசிட்டிவ் சார்ஞ் அதாவது நேர் மின்சாரம் என்று

வைத்துக்கொள்ளுவோம்.இந்த கார்பன் என்று சொல்லும்படியான இந்த வயிற்றில் இருக்கும்படியா அத கார்பன் கூட சரியா சொல்லமுடியாது.சரியான ஆங்கில வார்த்தை இல்லை.அபாணவாயு என்று பெயர்.அந்த கார்பன் கூட சேர்ந்த ஒன்று.இந்த பிராணவாயுக்கு ஆஃசிஜன் என்பான் அதுவும் கிடையாது.அது உற்பத்தி செய்வதற்கு எது காரணமாக இருக்கிறதோ அது .ஆகவே இந்த உச்சியில் இருக்கும்படியான பிராணானையும் வயிற்றில் இருக்கும்படியான அபாணனையும் இரண்டையும் ஒன்றாக ஒரு பயிற்சியின் மூலமாக சேர்த்து ஒரு இரசாயன கிரியை உண்டுபண்ணி அந்த ஒரு பயிற்சி முறையின் மூலமாக அப்படியே வயிற்றிலிருந்து வேகமாக அண்ணாக்கின் வழியாக கொண்டுவந்து இந்த பயிற்சியினாலே அங்கே அண்ணாக்கிலே இந்த காற்றானது இரண்டும் கலந்த இரசாயன வேதியியல் மாற்றத்தினாலே கலந்த அந்த காற்றானது நினைவினாலே அண்ணாக்கிலே அழுத்த அழுத்த அங்கே இருக்கும்படியான கபங்களையெல்லாம் இறக்கி உச்சியில் இருக்கும்படியான அனைத்து கபங்களையும் நீக்கி அந்த மயிர்ப்பாலம் என்றும் நெருப்பாறு என்றும் சொல்லும்படியான புருவமத்தியிலிருந்து உச்சிக்கு மேலாக செல்லக்கூடிய வழியைத்திறந்து இறைஅருளை இறை நிலையை சாகாக் கல்வியை காட்டக்கூடியதே இந்த தீட்சை.இந்த தச தீட்சையிலே புருவமத்தி என்று சொல்லக்கூடிய சிற்சபையிலும் நம்முடைய பிடரி என்று சொல்லக்கூடிய முகுளமும் தண்டுவடமும் சேரக்கூடிய அந்த பொற்சபையும் உச்சியாகிய ஞானசபை இந்த அகார உகார மாகார மூன்றையும் ஒன்று சேர்த்து மரணமில்லாப் பெருவாழ்வை தரக்கூடியதே இந்த வித்தை அதாவது உயிரோடு இருக்கின்றபொழுது மரணம் என்ன என்பதை பயிற்சியினாலே காட்டி மரணத்தை வெல்வதற்கு கற்றுக்கொடுக்கக்கூடிய சுலபமான வித்தையே வாசியோகம் என்பது ஆகும்.இந்த பயிற்சியினாலே அபாண பிராணனை ஒன்றாகச் சேர்த்து புருவமத்தியிலே தோன்றும்படியான ஒளியினாலே கபக்குற்றங்கள் நீங்கி எப்படி மரணம் வருகிறது என்பதை பயிற்சியிலே காட்டுகிறபொழுது புருவமத்தியிலே இருக்கக்கூடிய அந்த உயிர்ச்சத்தானது மேல் நோக்கி உச்சியை நோக்கி போகும்.சாதாரணமாக மனிதனுக்கு பிறக்கின்றபொழுது தனஞ்சயன் என்கின்ற வாயு உடம்பை விட்டு நீங்கி உடம்பை வெடிக்கச்செய்து அவனவன் பக்குவத்திற்கு தகுந்த மாதிரி உடற்கருவி வழியாக உயிர் வெளியேறும்.எப்படி வெளியேறுகிறது? பிட்யூட்ரி சுரப்பி என்று சொல்கிறோம்.அந்த சுரப்பிக்கு மேலே ஒன்று உண்டு.அது விஞ்ஞானத்திலே இல்லாத ஒரு இடம்.இந்த பிட்யூட்ரி சுரப்பியும் இயங்குவதற்கு அங்கே ஒரு நாளமில்லாச் சுரப்பி ஒன்று உண்டு.அந்த நாளமில்லாச் சுரப்பியின் மத்தியிலே இருக்கிறோமே அதுதான் நாம்.ஆகவே அந்த இடத்திலே புருவ மத்தியிலே இருக்கும்படியான உயிரணு மேல் நோக்கி செல்லுகின்ற பொழுது அங்கே தாமரை இதழ்போன்ற இதழுக்குள்ளே செல்லுகின்றபொழுது அங்கே இர்க்கப்பட்டு உயிரானது பிரிந்துவிடும்.ஆனால் நாம் இந்த யோக சாகாக்கல்வியை கற்றுகொடுக்கக்கூடிய வழியிலே புருவமத்தி என்ற சிற்சபையும் பிடரியிலே இருக்கும்படியான பொற்சபையும் உச்சியாகிய ஞானசபையும் திறப்பதற்கு வழியைக்காட்டி அப்படி அணு மேல் நோக்கி செல்லுகின்றபொழுது இந்த பயிற்சியின் வழியாக நெகிழ்ச்சியினாலே பிடரிக்கு இறங்கி அங்கே ஒரு அதீதமான வேகமான ஒரு சுழற்சியை ஜோதி காட்சியை உண்டுபண்ணி ஒவ்வொரு நாடி நரம்புகளிலும் உட்புகுந்து இச்சை செயலையும் அனிச்சை செயலையும் காட்டி எல்லா வல்லபத்தையும் காட்டி மரணத்தை நீக்கக்கூடிய வழியைக் காட்டும்.இதைத்தான் எல்லாம்வல்ல தக்கலை பீரப்பா அவர்கள் ஒரு பாடலிலே தெளிவாக இந்த சூட்சமத்தை குறிப்பிட்டிருக்கிறார்கள்

> பாலது வெண்மையெங்கும் பரந்த நம் ரசூல்பாதம்
> நாளது மௌத்துக்கு அப்பால் நடுவில் நின்றிலங்கும் ஜோதி

பாலை விட்டு எப்படி வெண்மை நிறம் பிரிந்து இருக்கமுடியாதோ அதுபோல இந்த உலகம் எல்லாவற்றிலும் கடவுள் நிறைந்திருக்கிறார்.ஆனால் மௌத்து என்கின்ற மரணம் வருகின்றபொழுது அதை நீ உணர்ந்து கொண்டு அந்த ஜோதியை அறிந்து கொள்ள முடியும் என்று

கூறியிருக்கின்றார்கள்.கடைசியாக ஞானம் 80 லே உள்ள புஜண்டர்பாடலை உங்கள் சிந்தனைக்கு விட்டு இந்த மெய்யான வழியை கேட்டதோடு மட்டும் அல்லாமல் சிந்தித்து சிந்தனையை சீர்தூக்கி பார்க்க வேண்டுகிறேன்.இந்த வாசி பயிற்சியை செய்வதனால் என்ன பலன் என்கின்றபொழுது விஞ்ஞானபூர்வமான பலன் சாதாரணமாக ஒருவர் தூங்குகிறபொழுது அதிகமான அளவு சுவாசம் வெளியேறி சீக்கிரம் இறந்துவிடுகிறான்.இந்த பயிற்சியை செய்து பழகிவர வர அவர் உறங்கிக்கொண்டு இருந்தாலும் சுவாசமானது ஒரு எல்லைக்குள் கட்டுப்பட்டு அந்த சுவாச அங்குலம் குறைந்து ஒருவன் தவம் செய்கிறபொழுது எப்படி மனமும் சுவாசமும் அடங்கி இருக்குமோ அப்படியே தூங்குகின்ற பொழுதும் இருக்கும்.இதை சோதனையிலே பார்த்துக் கொள்ளலாம்.ஞானம் 80 லே உள்ள புஜண்டர் பாடல்

பாரே நீ யோகமென்ற வழியைச் சொல்வேன்
பத்தியடா ஐம்புலனை பரத்தினூடே
சீரொருவர் தெரியாமல் மதங்கள் பேசி
திருவான உச்சியிலே சேராமற் தான்
ஆரொருவன் ஆதாரம் வெவ்வேரென்றேன்
அடுக்கடுக்காய் பன்னிரெண்டு தலங்கள் என்றே
வீரப்பா பேசியது மெலிந்து போவான்
விடமுண்ட அண்டமதை விரும்பிக்காணே
காணப்பா தலமெல்லாம் அண்டஉச்சி
கமலமடா பதினெட்டாம் கோட்டிற் சென்று
பூணப்பா மனத்தையும்தான் பிசகொட்டாமற்
பூட்டப்பா பிரம்மத்தில் புகுந்து என்நாளும்
வீணப்பா மந்திரங்கள் ஒன்றுமில்லை
விதியில்லை மதியில்லை கெதியுமில்லை
தோணப்பா தோணுமடா மனம் ஒன்றான
சுத்தமுடன் நீயிருந்து தவம் செய்வாயே
பாரப்பா பரபிரம்மம் ஒளியினாலே
பக்தியே நரம்புவழி பாயும்போது
ஆரப்பா இருகண்ணில் ஒளியதாகி
அண்டமெல்லாம் ஏகமாய் தெரியலாச்சு
காரப்பா நரம்பென்ற விழுதுவட்டம்
கபாலத்தில் முக்கூறாய் சுழுனை ஆச்சு
வீரப்பா காதுக்கும் நாக்குக்குந்தான்
வெற்றிபெற உரைத்தேனே நன்றாய்க்கேளே
பாரப்பா புருவமத்தி ஏதன்றாக்கால்
பரபிரம்மம் ஆனதோர் அண்டஉச்சி
நேரடா முன்சொன்ன நரம்பு மத்தி
நிலைத்ததடா சுழுனை என்று நினைவாய்ப்பாரு
பாரப்பா நாக்கையுந்தான் அண்ணாக்கேற்றி
பார்தனிலே பார்த்தவர்க்கு பலிதமில்லை
ஆரப்பா கண்வெடிக்கும் தேகம்போகும்
அடயோகம் என்பார்கள் ஆகாதப்பா
சாரப்பா மனம்தனையும் அண்ணாக்கின் நேரே
சார்ந்துமிக பார்க்கையிலே வாசிதானும்
வீரப்பா மேலடங்கும் கீழ் நோக்காது

வெட்டாத சக்கரத்தை அறியலாமே.

மற்றுமொரு பாடல்,

அறியலாம் மனம்தானே உயிர்தானாகும்
அண்டத்தில் சென்றிடவே முக்தியாகும்
பரியேறி செவ்வாரியும் நடத்தலாகும்
பஞ்சமா பாதகமும் பறந்தேபோகும்

ஆகவே இவ்வளவு தெளிவாக சொல்லியிருக்கிறார்கள்.ஆகவே மனிதனுக்கு இருக்கும்படியான ஐந்துவித அவத்தைகளையும் நீக்கி மெய்ஞான நிலையை அடைந்து மெய்யான வாசி நெறியை உணர்ந்து அறிந்து உங்களுக்கு தேவையான உலக இன்பங்களை எல்லாம் துய்த்து நிறைவான செல்வத்தையும் அருட்செல்வத்தையும் பொருட்செல்வத்தையும் இந்த இகமாகிய பரவாழ்க்கையிலேயே பெற்று என்றும் மரணம் இல்லாமல் வாழ்வதற்கு காட்டக்கூடிய வழியே ஸ்ரீகாகபுஜண்டரின் வாசியோகம். மெய்யான வாசியென்பதை இதற்குமேல் வெளிசொல்லமுடியாது சொல்லக்கூடாது .குருமுகாந்திரமாக அறிந்துகொண்டு சாக்கிர சொப்பன சுலுத்தி துரிய துரியாதித நிலைகளை கடந்த மெய்ஞான இறைநிலை அனுபவத்தை கடந்து 4448 வியாதிகளையும் நீக்கி 72,000 நாடிகளின் வழியாக அன்பையும் அருளையும் பெருக்கி என்றும் சிரஞ்சீவியாக வாழக்கூடிய வாழ்க்கையை பெறுவதற்கு எல்லா சித்தர்களும் என் தலைவனாம் சிவபெருமானாகிய அருட்பெரும் ஜோதி ஆண்டவரும் கருணையே வடிவான வள்ளல் இராமலிங்க பெருமானும் உங்களுக்கு அருள்வாராக.

அருட்பெரும் ஜோதி அருட்பெரும் ஜோதி
தனிப்பெரும் கருணை அருட்பெரும் ஜோதி